உ

ஸ்ரீ விநாயகர் துணை !!

ஸ்ரீ தையல் நாயகி உடனமர்
ஸ்ரீ சத்தீஸ்வரர் துணை !!





இந்து சமய அறநிலையத்துறை

கஸ்பாபேட்டை, ஈரோடு மாவட்டம்

## ஸ்ரீ தையல் நாயகி உடனமர்

# ஸ்ரீ சத்தீஸ்வரர் ஆலயம்

## திருப்பணி வேண்டுகோள்

அன்புடையீர் வணக்கம்,

“ஆலயம் தொழுவது சாலமும் நன்று.
கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்.”

என்ற முதுமொழிகளுக்கிணங்க ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம் கஸ்பா பேட்டை அருள்மிகு தையல் நாயகி உடனமர் அருள்மிகு சத்தீஸ்வரர் ஆலயம் நீண்ட காலம் முன்பு ஆகம விதிப்படி மகான்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு அதன் பின்னர் கொங்கு சோழ மன்னர்களால் சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பு கற்களால் கட்டப்பட்ட திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் மூர்த்தி தீர்த்தம் தலம் என மூவகையிலும் சிறப்பு பெற்ற தலமாக உள்ளது.









திருத்தலத்தின் மூலவரின் திருப்பெயர் அருள்மிகு சத்தீஸ்வரர். அம்பாளின் பெயர் அருள்மிகு தையல்நாயகி மனப்பிணி, உடற்பிணி, இவைகளை போக்கி நல்வாழ்வு வாழ வைத்து பிறவிப்பிணி நீக்கும் வைத்தீஸ்வரனின் திருக்கோயில் ஈசனின் அம்பாளின் பெயர் தையல்நாயகி என்பது இங்கு முன்பு சோழ மன்னன் திருக்கோயிலை அமைத்த நோக்கம் உடலாலும், மனதாலும் முடமான குழந்தைகளுக்கு திருக்கோயிலுடன் இங்கே ஒரு ஆதுரசாலை (தங்கும் வசதியுடன் கூடிய மருத்துவமனை) அமைக்கப்பட்டு திருக்கோயிலிலும் சிறப்பாக வழிபாடு நடைபெற்று வந்து கொண்டிருந்தது.








இங்கே எழுந்தருளியுள்ள இறைவனின் லிங்க ரூபம் ஆனது மற்ற திருக்கோயிலில் இல்லாத முறையில் வித்தியாசமாக பிரபஞ்ச வடிவில் தட்டையான உருண்டையாக எழுந்தருளியுள்ளார். திருக்கோயிலின் பின்புறம் லிங்கோத் பவர் அமைக்கப்பட்டுள்ளதின் கோஸ்டத்தின் மேல்புறம் ஒரு பெண்மணி தனது இடுப்பில் ஒரு குழந்தையுடனும் கையைப் பிடித்துக் கொண்டு நிற்கும் மற்றொரு குழந்தையுடனும் உருவாக்கப்பட்டுள்ளது இத்திருக்கோயிலின் சிறப்புகளை குறிக்கின்றது.

## சிவாலய திருப்பணியின் பெருமை



ஆதி காலம் முதல் கோவில் என்றால் சிறப்பாக சிவாலயம் மட்டுமே குறிக்கப்படும் புகழ்பெற்ற சோழ மாமன்னன் ராஜராஜன் தனது திருக்கோயில் கல்வெட்டுகளான மெய்கீர்த்தியில் சொன்னது சிவலாய திருப்பணியில் எப்படி ஒருவர் ஈடுபட்டாலும், அவர்களது திருவடிகளை இப்போதே வீழ்ந்து வணங்குகின்றேன். வரலாற்றில் எக்காலத்திலும் இல்லாது எண்ணிக்கையில் எண்ணற்ற திருப்பணிகளை சோழர்கள் செய்து திருக்கோயில் வழிபாடும் தடையின்றி நடந்ததனால் சோழசாம்ராஜ்யம் உலக பெரும் பேரரசுகளில் ஒன்றாகி அவ்வாட்சிகாலம் தமிழகத்தின் பொற்காலம் திகழ்ந்தது என்பதை வரலாறு காட்டுகின்றது.

அதிலும் பழுதுபட்ட புராதன சிவாலயங்களை புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுதல் என்பது எல்லா புண்ணியபணிகளிலும் சிறந்த பணி. இதனை தென்காசி திருக்கோயிலினை கட்டி வைத்த பராக்கிரம பாண்டியன்



“ ஆராரயினும் இந்த தென்காசி மேவு பொன்னாலயத்து
வாராததோர் குற்றம் வந்தால் அப்போது அங்கு வந்ததனை
நேராகவே ஒழித்துப் புறப்பார்களை நீதியுடன்
பாரார் ஆரியப் பணிந்தேன் பராகிரம பாண்டியனே ”

சிவாலய பணிகளில் ஈடுபட்டால் நம தீவினைகள் முற்றிலுமாய் நீங்கப்பெறும். கூடவே நல்வினைகள் சேரும் ஆலயத் திருப்பணிகளில் ஈடுபடல், உடலுழைப்பு தரல், இடம் அல்லது மனை தரல், குளம் தூர்வாதேல், கல், மண் அளித்தல் ஆகிய எல்லாம் மிகமிக சிவபுண்ணிய செயல்களாம்.

## நம் பழம் பாடல் பகரும் இப்படி :



“ புல்லினால் ஒரு கோடி புதுமண்ணால் பத்துகோடி
செல்லுமா ஞாலந்தன்னில் செங்கல்லால் நூறு கோடி
அல்லியங்கோதைமின்னே ஆலயம் மடங்கள் தம்மை
கல்லினால் கட்டுவித்தார் கயிலை விட்டு அகலாரன்றே ”

சிவன் கோவிலுக்கு ஒரு செங்கல் வழங்குதல், அந்த செங்கல் எத்தனை நாட்கள் கோவிலில் இருக்குமோ அத்தனை நாட்கள் நீங்கள் கைலாயத்திலோ அல்லது வைகுண்டத்திலோ வாசம் செய்யும் புண்ணியம்.





இரு பலநூறு ஆண்டுகளுக்கு மேல் சிறப்புடன் நடைபெற்று வந்த திருக்கோயில் சுமார் 70 ஆண்டுகளாக மெல்ல மெல்ல வழிபாட்டில் குறைபாடுற்று அதுவும் கடந்த 20 ஆண்டுகளாக பக்தர்கள் அனைவரும் பார்க்கக்கூட வேண்டாம் என்று அஞ்சி நடுங்கி விஷ பிராணிகளும், வௌவால்களும் அண்டி முற்றிலும் சிதிலமடைந்து வெயில் மழை என முள் புதர்களுக்கிடையே வாசம் செய்த சத்தீஸ்வரர் திருக்கோவில் இன்று ஊரே வியந்து பார்க்கும் அளவிற்கு இப்புராதன பொக்கிஷத்தினை பழமை மாறாமல் புதுப்பித்து குடமுழுக்கு செய்திட திருவருள் கூட்டி வைத்துள்ளது/ நல் உள்ளம் கொண்ட தாங்கள் வழங்கும் சிறு உதவியும் ஈசன் திருவருளால் பெருகி திருப்பணிகள் விரைவில் நிறைவு பெறும் என்பதால் தங்களால் இயன்ற பொருளுதவி செய்து ஆதரவளித்து சிவாலய திருப்பணி நல்ல முறையில் நடைபெற ஒத்துழைப்பு நல்கி ஸ்ரீ தையல்நாயகி அம்மன் சமேத ஸ்ரீசத்தீஸ்வர சுவாமியின் திருவருளை நாமும் நம் சந்ததிகளும் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.



“ கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்கு
இம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே ”

திருவாசகத்தின் குலாப்பத்து பதிகத்தில் தான் மாணிக்கவாசகர் இவ்வாறு பாடிப் பரவுகிறார். சிவாலயத் திருப்பணிகளுக்கு உதவுவோரின் குடும்பமும் அவர்களின் ஏழேழ் தலைமுறைகளும் சீரும் சிறப்புமாக வாழும் என்பது இப்பாடலின் சுருக்கம். மாணிக்க வாசகரின் மணிவாக்கின் படி இப்புண்ணிய செயலில் பங்கெடுப்பது தங்கள் வாழ்வின் பாவங்களை போக்கி சத்தீஸ்வரரின் அருளால் பதினாறு பேறும் பெறச்செய்யும் என்பது சத்தியம் என்பதால் தாங்களும் மனமுவந்து இத்திருப்பணியில் பொருளுதவி செய்து பங்கெடுத்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.










ஆலய திருப்பணி நந்டைபெறுவதற்காக 26.12.2021 மற்றும் 27.12.2021 தேதியில் ஸ்ரீ ருத்ராபிஷேகம் ஸ்ரீ ருத்ரா பூஜை மற்றும் சண்டி ஹோமம் சண்டி பூஜைகளுக்கு அருள்மிகு காசி விஸ்வநாதர் ஆலயத்திலிருந்து 12 வேத பண்டிதர்கள் வந்து இருந்து சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள்

கேரள மாநிலத்தைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற திரு.உன்னிகிருஷ்ணன் பணிக்கர் அவர்கள் ஸ்ரீ சக்திஸ்வரர் திருக்கோவிலுக்கு வருகை தந்து பிரசன்னம் பார்த்து திருப்பணிகள் நடைபெற பரிகாரங்களை கூறினார்






திருப்பணிக்காக பாலாலய விழாவில் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு. சேகர் பாபு அவர்கள், வீட்டு வாரியத்துறை அமைச்சர் மாண்புமிகு. சு. முத்துசாமி அவர்கள் , டாக்டர். C.K. சரஸ்வதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் , ஈரோடு மாவட்ட கலெக்டர் அவர்களும் மற்றும் இந்து அறநிலை துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்






ஸ்ரீ தையல் நாயகி உடனமர் ஸ்ரீ சத்திஸ்வரர் திருக்கோவில் திருப்பணிக்காக புண்யவாசனை செய்து பொன் ஏர்பூட்டி நவதானியம் விதைக்கப்பட்டு கோபூஜை செய்து பசுமாடு, எருது மற்றும் கன்றுகளை நவதானியம் மேய விடப்பட்டது

Scan for Location

மேலும் திருப்பணி தொடர்புக்கு

83000 38488 | 83000 38555 | 94422 45966 | 83000 38459